நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.50/2022

அரசு தரப்புக்காக அ. சா.5 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ஆனந்தராஜ் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 7 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

31st day of December 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.27 )

நான் தற்போது பண்ருட்டியில் வசித்து வருகிறேன். நான் கேபிள் டிவி ஆப்பரேட்டராக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான் அந்த கையொப்பத்தை 30.09.2021ஆம் தேதி சத்தியமூர்த்தி தெருவில் சரவணன் வீடு பட்டு மேஸ்திரி வீடு மனோகர் இடம் ஆகியவற்றை பார்வையிட்டு மார்க் செய்து ஆவணம் தயார் செய்தார்கள் அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டேன். (அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**–

இந்த வழக்கில் அ.சா.1 எனது உறவுக்காரர் என்றால் சரிதான். போலிசார் அந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 10 1/4 மணிக்கு வந்தார்கள். பார்வை மகசர் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் போலிசார்

ஆவணம் எழுதினார்கள். அ.சா.1 உறவினர் என்ற முறையில் காவல் நிலையத்தில் போலிசார் தயாரித்த ஆவணங்களில் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது போலிசார் கேட்டபடி பொய்யா சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(முடிக்கப்பட்ட நேரம் 11.32)

2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.